# சித்த மருத்துவத்தில் முஸ்லீம்களின் பங்களிப்பு - ஓர் ஆய்வு

**Dr. Anbuchelvy Sritharan,** *Senior Lecturer, Dept. of Siddha Medicine, University of Jaffna.*
&
**Dr. Ganesh Sritharan,** *Jaffna.*

**அறிமுகம்:**
சித்த மருத்துவம் தமிழர்களிடையே வளர்ந்து வரும் மருத்துவமாகும். இம்மருத்துவ முறை சித்தர்களால் பரப்பப்பட்டதாகும். சித்தர்கள் மலைகளின் குகைகளில் தங்கி நின்று துறவறம் தாங்கி யோகப் பயிற்சி செய்து தம்மாணவர்களுக்கு யோகம் பயிற்றுவித்துக்கொண்டு உலோகம், பாடாணம், உப்புக்கள், ஆகியவற்றை பச்சிலை, செய்நீர், திராவகம், துருதி ஆகியவற்றின் உதவிகொண்டு கட்டு, களங்கு. சுண்ணம், செந்தூரம், பற்பம் எனும் உயர்ந்த மருந்துகளைச் செய்து தீராப் பிணிகளைத் தீர்த்துக் கொண்டு வருபவர்கள். அத்துடன் காயகற்பமுண்டு நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு நீங்கியவராய் வலுத்த உடலையும். நிலைத்த உள்ளத்தையும் கொண்டு இரசவாதக்கலை வல்லவர்களானவர்.

**குறிக்கோள்:**
சித்த மருத்துவ வளர்ச்சியில் இஸ்லாமிய மதத்தவர்களான முஸ்லீம்களின் பங்களிப்பு எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதை ஆராய்தல்.

**ஆய்வு முறை:**
இங்கு சித்த, ஆயுர்வேத மருத்துவ முறைகளில் ஒப்பீட்டளவில் சில ஒற்றுமைகள் காணப்பட்டுள்ளன. முஸ்லீம் வைத்திய யுனானி முறைகள் சித்தமருத்துவத்துடன் ஒத்தளவில் இல்லாவிட்டாலும் முஸ்லீம்கள் சித்த மருத்துவத்திற்கு பெரும் பங்காற்றியிருப்பதை அறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வுக் கட்டுரையானது ஒரு விவரண இலக்கிய ஆய்வாகும்.

**விளக்கவுரை:**
சித்த மருத்துவத்தில் சித்தர்களால் இரசவாதக்கலை சிறப்பாகக் கையாளப்பட்டு வந்துள்ளது. இந்த இரசவாதக்கலை ஐரோப்பாவில் 17ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் உபயோகப்படுத்தப்பட்டது. ஆனால் இதற்கு முன் இந்தியாவில் சித்தர்களால் கையாளப்பட்டு வந்துள்ளது. இக்கலையினை இங்கிருந்து முஸ்லீம்கள் அரேபியாவிற்கு கொண்டு சென்றனர். இதற்கு ஆதாரமாக 13ஆம் நூற்றாண்டிலிருந்து ஹாஜீ கலிபாவும் மற்றொருவருமாக இந்துக்களுடைய சமஸ்கிருத வைத்திய சாஸ்திரங்களில் முக்கியமானவற்றை கலிபாக்களான ஹருண், மன்சூர் என்பவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு இணங்க அரேபிய பாசையில் மொழி பெயர்த்தது குறிப்பிடத்தக்கது. இதில் சரகம், சுருதம், மாதவ நிதானம், இரஸசாத்திரம் போன்ற நூல்கள் முக்கியமானவை. டாக்டர். எச்.எச் வினு ஹாஸ் என்பவர் சரகம், சூசுருதம், அஷ்டாங்க ஹிருதயம், நிதானம் முதலிய சித்த, ஆயுர்வேத நூல்கள் சாத்திரக்கல்வியில் ஆர்வமுடைய முகம்மதியர்களால் அரேபியபாசையில் மொழிபெயர்ப்பு மூலமாக கற்பிக்கப்பட்டன என்பர்.. அரேபிய பாசையில் சரகம் “ஸரக்” என்றும், சூசுருதம் “சூஸ்ருத்” என்றும் நிதானம் “பதான்” என்றும் அஷ்டாங்ககிருதயம் “அஸங்கர்” என்றும் மாற்றப்பட்டு திரிபடைந்தன. இதனால் சித்த ஆயுர்வேத மருத்துவ சாஸ்திரங்களை அரேபியர்கள் அறியக்கூடிய வாய்ப்பு உருவானது என்பது குறிப்பிடத்தக்கது. சித்தர் கணத்தில் திருமூலருக்கு அடுத்ததாக இராமதேவர் இடம்பெறுவது மிக முக்கியத்துவமானது. இராமதேவர் என்ற பெயருடன் இருந்த சித்தர் இரசமணியின் உதவியால் ஆகாய சஞ்சாரம் செய்து மெக்காவுக்கு சென்றார். மெக்கா வீதியில் வலம் வரும் போது தோழர் எனப் பொருள்படும் சாயபு என்பவரைக் கண்டு சாத்திரங்களில் தர்க்கம் செய்து அறிவை வளர்த்துக் கொண்டார். பின்னர் அங்கு ‘யாகோபு’ என்னும் பெயர் பெற்று ‘சுன்னத்’ செய்து தொப்பி அணிந்து பின் முஸ்லீம் சித்தரானார். பின் இவர் வைத்திய சிந்தாமணி என்ற பெயர்பெற்ற எழுநூறு விருத்தங்களை இனிய கவியாகப் பாடினார்.

வைத்திய சிந்தாமணி 700இன் காப்பில் நபிகளை வணங்கி நூல்தனை வெளியிடுகிறார். யாகோபு முனிவர் திருவாய் மலர்ந்தருளிய வைத்திய சிந்தாமணி எழுநூறுக்குச் சுருக்கம் குறுநூல் - 55 ஆகும். இதில் முதன் முதலாக எங்கும் நிறைந்த நபியைப் போற்றி இந்த உலகத்தில் உள்ளவர்கள் பிழைப்பதற்காக வைத்தியநூல் 700இன் குருவான ஐம்பதைக் கூறுகிறேன் என்கிறார். யாகோபு முனிவர் திருவாய் மலர்ந்தருளிய வைத்திய சூத்திரம் - 55இல் “எங்கும் நிறைந்த பரம்பொருளும் ஆன பூரணத்தைப் போற்றி, நபிமார்கள் பாதம்

போற்றி, தற்சொருபமாய் விளங்கும் பரவெளியைப் போற்றி, வைத்தியம்- 300ஆம் சொன்னேன். சொல்ல நபிமார்களின் பாதம் காப்பாகட்டும்'' என்று கூறுகின்றார். வைத்தியம் 300இல் சுண்ணம், சுண்ணக் காண்டம், லோக செந்தூரம் வாத வைத்தியம் ஆகியன அடங்கி உள்ளன. யாகோபு எனப்படும் முஸ்லீம் சித்தர் சித்த மருத்துவத்திற்கு ஆற்றிய பங்கு அளவிட முடியாது. ஆவர் தன்னுடைய நூலில் சித்த மருத்துவத்தில் உள்ள தைல வகைகள், பஞ்சமித்திரம், புடத்தின் பாகம், பிட்டுமார்க்கம், மனோசிலை, நவச்சாரம், எவச்சாரம் போன்ற சார வகைகளின் வைப்பு முறைகள், காந்தம், அப்பிரகம், வங்கம் பற்றி எல்லாம் பாடியிருக்கிறார். அவர் பாடியிருக்கும் பாடல்கள் மலைக்குள் தண்ணீர் இருப்பது போல் கடினமாகவிருந்தாலும் இப் பாடல்களுக்குள்ளே உயிருக்கு ஆதாரமான மருத்துவ முறைகள் இருப்பதைக் காணலாம்.

சித்த மருத்துவத்தில் சில மூலிகைகள் மறைபொருளிலே பாடப்பட்டுள்ளன. ஏனெனில் மருத்துவ வாகடத்தை வைத்தியரல்லாதவர்கள் பயின்று தவறான வைத்தியம் செய்து விடுவார் என்ற ஒரு காரணமும் உள்ளது. அந்த வகையில் யாகோபு சித்தர் தமது வைத்திய சிந்தாமணியில் மூலிகைகளைக் குறிப்பிடும் போது: 'பூனையது வணங்கியிலை' (60) என்று குறிப்பிடும் போது குப்பைமேனியைக் குறிப்பிடுகிறார். 'குமரனுடைய மனைவியைத்தான் மூலம் வாங்கி' (346) இங்கு குமரனுடைய மனைவியின் பெயர் வள்ளி, மூலம் என்பது வேர்க்கிழங்கு வள்ளிக்கிழங்கைக் குறிக்கிறது. 'தாயதனைக் கொன்றவளை' (412) வாழை எனக் குறிக்கிறது. சித்தமருந்து செய்முறைகள், எரிப்பு முறைகள், மருந்துகளின் சுத்தி முறைகள், பூச்சு மருந்துகள் என்பன வைத்திய சிந்தாமணி - 700, குறுநூல் - 55, வைத்திய சூத்திரம் முதலியவற்றில் கூறப்பட்டுள்ளன. இவற்றில் கூறப்பட்டுள்ள சித்த மருத்துவ தத்துவங்கள், மருந்து முறைகள் என்பன சிறப்பான சிகிச்சைக்கு இட்டுச் செல்கின்றன. யாகோபு முஸ்லீம் சித்தர் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு ஆற்றிய பணி அளவிட முடியாது எனக் கூறலாம்.

பொதுவாக முஸ்லீம்களிடையே மருந்துச் சரக்கு வியாபாரம் பிரபல்யமாக இருந்தது. இவர்களாலே யாழ்ப்பாணத்தில் சித்த ஆயுர்வேத மருந்து தயாரிப்பதற்குரிய மூலப்பொருட்கள் கிடைக்கப்பெற்றன. முஸ்லீம் வாணிபர்கள் யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு ஊரிலும் சென்று வாணிபத்தில் ஈடுபடும் போது கண்ணில் ஏற்படும் இரத்தக்கசிவு போன்ற கண் வியாதிகளுக்கு சேவலின் கொண்டையைக் கிழித்து இரத்தம் எடுத்து கண்ணுக்குச் சிகிச்சை செய்யும் முறைகள் கூட சித்த மருத்துவ மூலிகை மர்மம் எனும் நூலில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. யுனானி மருத்துவத்தில் உபயோகிக்கும் மருந்துச் சரக்குகள் சில சித்த பரம்பரை மருந்துகளிலும் காணப்படுகின்றன.

**முடிவுரை:**

சித்த ஆயுர்வேத வைத்திய் முறைகள் இந்தியாவிலே தோன்றின. இவ் வைத்தியத்தில் உள்ள இரசாயனத்தின்(ஊாநஅளைவசல) சிறப்புக்களை உணர்ந்த அரேபியர்கள் 13ஆம் நூற்றாண்டில் இந்துக்களின் சமஸ்கிருத வைத்திய சாஸ்திரங்களை அரேபிய மொழிகளில் மொழி பெயர்த்து இம்மருத்துவ முறைகளை உலகறியச் செய்ததுடன் பாதுகாத்தும் வந்தனர். சித்த மருத்துவத்தை வளர்ப்பதில் சித்தர்களின் பங்கு மிகப்பாரியளவு இருந்தது. யாகோபு எனப்படும் முஸ்லீம் சித்தர் பல சித்த மருத்துவ மருந்து செய்முறைகள், மருந்து சுத்தி முறைகள், பாஷாணங்களின் பயன்பாடு, செந்தூர, பஷ்ப எரிப்பு முறைகள் ஆகிய பல்வேறு அரிய முறைகளைக் கண்டுபிடித்து நூல்களாக்கி சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியுள்ளார். சில முஸ்லீம் வாணிபர்களினால் யாழ்ப்பாணத்தில் பரப்பப்பட்டுள்ள சில கைவைத்திய முறைகள் இன்றும் யாழ்ப்பாண மக்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. சித்த மருத்துவ வளர்ச்சியில் முஸ்லீம்களின் பங்கு குறிப்பிடத்தக்களவு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.